# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No.398/2021 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.1 |
| Name | :கருப்பையா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.08.2023

-----

( எதிரிகள் 1முதல் 6 எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது வேளாம்பூரில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிகிறேன். நான் இந்த சம்பவத்தின் போது அத்திபட்டி கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். அது சமயம் சீல்நாயக்கன்பட்டி கிராம நிர்வாக அதிகாரி விடுமுறையில் இருந்ததால் நான் கூடுதல் பொறுப்பாக அதிகாரியாக பணிபுரிந்த போது கடந்த 24.09.2017ல் மாலை 4.00 மணியளவில் ஆர்.டி.ஓவின் வாய்மொழி உத்தரவின் பேரில் சீல்நாயக்கன்பட்டி கிராம பகுதியில் உள்ள அரசு புறம்போக்கு ஓடையில் மணல் அல்லுவதாக தகவல் கிடைத்து அதன் பேரில் சம்பவ இடத்திற்கு நானும், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருநாவுக்கரசும், எழுமலை கிராம உதவியாளர் பாலு ஆகிய

3பேரும் ஓடைக்கு சென்றோம். எங்களை பார்த்தவுடன் மணல் வண்டியை டாடாஏசியில் ஏத்திக்கொண்டு எங்களை நோக்கி வந்தது. அது சமயம் நாங்கள் வண்டியை மறித்தோம் வண்டியை நிறுத்தவில்லை. பின்பு நாங்கள் 3பேரும் பின்தொடர்ந்து சென்றோம் அந்த வண்டி நாகமநாயக்கன்பட்டி, வெள்ளைமலைப்பட்டி வழியாக சென்றது. அல்லமநாயக்கன்பட்டி வழியாக சென்ற போது வண்டி வலது பக்கமாக சென்றது. செல்லமணி தோட்டத்திற்கு மேலே அந்த வண்டியை நிறுத்தினார்கள். வண்டிக்கு முன்னாடி இருந்து வாசிமலை மகன் சௌந்தர் என்ற சௌந்தர்பாண்டி இருந்தார். மற்றும் கந்தசாமி, பழனி ஆகிய இருவரும் இருந்தனர். சீல்நாயக்கன்பட்டியை சேர்ந்த நாகர் மகன் நாகமலை டாடாஏசி வண்டியை ஓட்டினார். வண்டிக்கு பின்னாடி இருந்து கிருஷ்ணன், செல்லப்பாண்டி, ஊர்க்காலன் ஆகியோர் வண்டிக்கு பின்புறம் உட்கார்ந்து இருந்தார்கள். வண்டியை அவர்கள் நிறுத்தும் பொழுது மணி 4.30 இருக்கும். வண்டியை விட்டு இறங்கி வந்தார்கள். நாங்கள் வருவாய்துறையில் வேலை செய்வது அவர்களுக்கு நன்றாக தெரியும். சௌந்தரும் மற்றும் அவர் உடன் இருந்தவர்களும் அசிங்கமான வார்த்தைகளால் தேவுடியா மகனே என்று திட்டினார்கள். அதன்பிறகு சௌந்தர் எங்களை அடித்து கொல்லுங்கடா என்று சொல்லி வண்டிக்கு பின்னாடி இருந்த கடப்பாரையை எடுத்து இவனை அடித்து கொல்லுங்கடா என்று தலைக்கமேல் அடிக்க வந்தார். அப்போது நான் விலகி கொண்டேன் இல்லையென்றால் என் தலையில் காயம் ஏற்பட்டு என்

உயிருக்கு ஆபத்து வந்திருக்கும். என்னையும் திருநாவுக்கரசு, தலையாரி பாலு ஆகிய மூவரையும் பழனி, நாகமலை, கிருஷ்ணன், ஊர்க்காலன், செல்லப்பாண்டி எங்களை முதுகிலும், கன்னத்திலும் அடித்தார்கள். திருநாவுக்கரசுக்கு வலது பக்க கண்ணில் வீக்க காயம் ஏற்பட்டது. எனக்கும், பாலுவுக்கும் ஊமக்காயம் ஏற்பட்டது. அதன் பின்னர் மணல் மூட்டை அனைத்தையும் எடுத்து கீழே போட்டுவிட்டார்கள். இனிமேல் எங்கள் வண்டியை பிடித்தால் உங்களை இந்த வண்டியால் ஏற்றி கொன்று விடுவோம் என்று மிரட்டினார்கள். அதன் பின் சென்று விட்டார்கள். அதன்பிறகு நாங்கள் 3பேரும் எழுமலை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். அதன் பின்னர் எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். எங்களுக்கு ஏற்பட்ட காயம் சிறிய காயம் என்பதால் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று அன்றைய தினமே மருத்துவமனையில் இருந்து வந்துவிட்டோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது அ.சா.ஆ,1ஆகும். காட்டப்படும் கடப்பாரை கம்பியை கொண்டு 1வது எதிரி என்னை தாக்க பயன்படுத்தியது தான் அது சா.பொ.1. ( சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் டி.என்.47 ஏ.சி.4366 என்ற பதிவு எண் கொண்ட டாடா ஏசி வாகனம் 1வது எதிரி பிணையில் எடுத்துச்சென்றதால் அதை 1வது எதிரி ஆஜர் படுத்தாததால் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

/*sd*/Thiru.P.S.ரஸ்கின் ராஜ்,17.8.23
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.